2003 ஏப்ரல் 10]

மருத்துவரைத்தான் அங்கே நிரந்தரமாக இருக்கச் சொல்லி அவரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அவரும் அரைமனதோடு உறுப்பினர் முன்னிலையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார். எனவே, அதே பெண் மருத்துவர் அங்கே நிரந்தரமாக்கப்படுவார் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியநாயக்கன்பாளையத்தைப் பொறுத்தவரையில், அது இன்னும் ஒரு தரம்உயர்த்தப்படாத மருத்துவமனையாகத்தான் இருந்து வருகிறது. அந்த மருத்துவமனை நிச்சயமாக ஒரு தாலுகா மருத்துவமனை அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளும் அங்கே நிச்சயமாக நான் உங்களுக்கு உறுதி அளித்ததைப்போல விரைவிலே செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 223, திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

223—

கடன் தள்ளுபடி

•23081—திரு. பி.கே.டி. நடராஜன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தக்காவிக் கடன் வழங்கப்பட்டுள்ளதைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தக்காவிக் கடன் தள்ளுபடி செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 10

திரு. பி.கே.டி. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மலைத்தோட்ட விவசாயிகள் கணிசமாக உள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால், வறட்சி ஏற்பட்டு, மண்வளம் எல்லாம் குன்றிப் போயும், காப்பி, மிளகு, எலுமிச்சை போன்ற பயிர்களெல்லாம் நோயினால் பாதிக்கப்பட்டும், சரியான விளைச்சல் இல்லாமலும், விளைந்த பயிர்களுக்கு சரியான விலை இல்லாமல் விலைவீழ்ச்சி ஏற்பட்டும், மலைத்தோட்ட விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இதற்கு முன்னாலே இதே நிலை 1979 ஆம் வருடத்தில் ஏற்பட்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் அந்தத் தக்காவிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற மாண்புமிகு இதயதெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அனைத்து விவசாயிகளுக்கும், கூட்டுறவு கடனில் வட்டி, அபராத வட்டி, நில வரி, தல வரி, தலமேல் வரி என்று தள்ளுபடி செய்ததைப்போல எனது பகுதியிலுள்ள மலைத்தோட்ட விவசாயிகளின் துயர்துடைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு மறுபரிசீலனை செய்து, தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்யுமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாகக் கிட்டத்தட்ட 9.20 இலட்சம் ரூபாய் கடனாக நிலுவையில் உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 1.95 கோடி ரூபாய் கடனாக நிலுவையில் உள்ளது. தமிழ்நாட்டில் 31-3-2001 வரை 83.7 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. தமிழக அரசுக்கு இருக்கிற நிதி நெருக்கடியில் அந்தக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்வது என்பது இயலாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

2003 ஏப்ரல் 10]

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மண்வளப் பாதுகாப்பின் மூலமாக அந்தந்த நிலங்களிலே நீரைத் தேக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கரைகள் அமைக்கப்பட்டன. ஆனால் அந்த விவசாயிகளுடைய அனுமதியின்றி செய்யப்பட்டது. அவர்களிடத்தில் கேட்டு அதைச் செய்யலாமா என்கின்ற முறையில் அவர்களின் ஒப்புதலைப் பெற்று இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. சாதாரணமாக ஒரு விவசாயி 50 ரூபாயில் அந்தக் கரையை அமைத்துக்கொள்ள முடியும் என்று சொன்னால் ஏறக்குறைய 200 ரூபாய்க்குமேல் அந்தத் திட்டத்தின் மூலமாக அவர்கள்மேல் கடன் சுமை ஏற்றப்பட்டுள்ளது என்கின்ற நிலை இருக்கிறது. எனவே, இதை அரசு பரிசீலித்து—அந்த விவசாயிகள் எல்லாம் வறட்சியின் காரணமாக கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாகவே மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள்—அவர்களுக்கு ஏதாவது மானியமாகவாவது, பாதித் தொகையாவது கழித்து வசூல் பண்ணுவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள், 50 ரூபாய் செலவாகும் என்று சொன்னால், 200 ரூபாய் வரை செலவாகிறது என்று. இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் அரசினுடைய கவனத்திற்கு வந்து, தற்போது இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது அந்தந்தப் பகுதியிலே இருக்கிற, அந்த மக்களினுடைய பங்கேற்போடுதான் நடத்துவது என்று இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்தக் கடன் என்பது அவர்களுடைய நிலங்களை அவர்கள் வளப்படுத்துவதற்காகத் தருவது. அரசுக்கு இருக்கிற இந்தச் சிரமமான சூழ்நிலையில் இதுபோன்ற கடன்களைத் தள்ளுபடி செய்வது இயலாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 224, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.